உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி உடு] அக்ஷய ஹ தைமீ [பகுதி ௩.

Vol. XXV. January-February-1927. No. 3.

## கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[எ0-ம் பக்கத்தொடர்ச்சி].

336. "என்புகழ் கின்ற தேழை எயினனேன்! இரவி யென்பான்
தன்புகழ்க் கற்றை மற்றை ஒளிகளைத் தவிர்க்கு மாபோல்,
மன்புகழ்ப் பெருமை நுங்கள் மரபினோர் புகழை யெல்லாம்
உன்புகழ் ஆக்கிக் கொண்டாய், உயர்குணத் தரவுத் தோளாய்!"

இ-ள். "ஏழைவேடனான நான் (இராசாதிராசனான உன்னைப்) புகழ்வது எப்படி! சூரியன் தன் ஒளியால் மற்றைய (வானசோதிகளின்) ஒளிகளை (த் தன்னொளியாக்கி அவைகளைப் பார்ப்போர்கண்ணுக்குப் புலப்படாமற்) போக்கும்விதம்போல, (நீ உன் புகழால்) உங்கள் குலத்தினோர்புகழ்களெல்லாவற்றையும் உன்புகழாக்கி (அவைகள் தோன்றாமற் போக்கி) னாய்!" (என்றான்).

என்-எப்படி (இதற்குமுந்திய 328-ம் பாட்டுரையைப் பார்க்க). ஏழைஎயினனேன்-(கேவலம்) எளியவனும் (ஈன) வேடனுமாகிய யான். இரவியென்பான்-சூரியனென்று சொல்லப்படுவான். 'இல்வாழ்வா னென்பான்' என்ற குறளுரையில் 'என்பான்' என்பது 'என்றுசொல்லப்படுவான்' என்று பொருள்கூறப்பட்டிருத்தல் காண்க. "கற்றை-திரணக் கூட்டம். (உ-ம்) 'கண்ணிற்கடைத்தீஉக நெற்றியிற் கற்றைநாற' இராமா. நகர்நீங், கக௬" (சங்க அகராதி). புகழ்க் கற்றை-(இருளை விழுங்கும்ஒளி,

பனியைப் பருகும் வெயிலென்னும்-ஒளி யென்று புகழப்படும்) புகழை யுடைய ஒளிகளின் தொகுதி. 'தவிர்க்குமாறு,' 'தவிர்க்குமா' என ஈறு தொக்கது. தவிர்க்குமாறு-போக்கும்விதம். தவிர்தல்-போதல் (சிந்தாமணி 2542 உரை). மன்-நிலைபெற்ற. 'புகழ்ப்பெருமை', பெருங்கதை (20 '-ம் பக்கம் யில் 'புகழதுபெருமை' யென வருதல் காண்க. நுங்கள்-உங்கள். மரபு-வமிசம்-குலம். உரவு-வலிமை. செய்யுளாதலால், கற்றையால் எனற்பாலது கற்றையென்றும், பெருமையையுடைய எனற்பாலது பெருமையென்றும் தொக்குநின்றன. 'மன்புகழ்பெருமை' யென்பதும் பாடம். அதற்கு அரசர் புகழும் பெருமையையுடைய எனப் பொருள் கொள்க.

மன்புகழ்ப் பெருமை நுங்கள் மரபினோர்-(நிலையாத செல்வப் பெருமை சேனைப்பெருமை முதலிய பெருமைகளைப் பெருமையாகக் கொள்ளாமல்) நிலையான புகழ்ப் பெருமை(யே பெருமையாக) உடைய உங்கள் குலத்தவர்கள். மன்புகழ்ப் பெருமை என்பதற்கு நிலைத்த புகழையும் பெருமையையும் உடைய என்றும் நிலைத்த புகழ்மிகுதியை யுடைய என்றும் பொருள்கொள்ளலாம். குகன் பரத னொருவனுடன் பேசுகின்றானாயினும் பக்கத்து நின்ற சத்துருக்கனையும் தான் முன்னமே பழகியுள்ள இராமலக்குமணரையும் உளப்படுத்து நுங்கள்மரபினோ ரென்றான். உயர்குணத் துரவுத் தோளாய்-உயர்ந்த குணத்தினையுடைய வலிமைபொருந்திய தோளினாய். உயர்குணம் உள நலத்தையும் உரவுத் தோள் உடல்நலத்தையும் குறிப்பித்தன. இரண்டும் புகழ் ஈட்டுதற் கேதுவானவை.

இப்பாட்டின் முன்னிரண்டடிகள் உவமானத்தையும் பின்னிரண் டடிகள் உவமேயத்தையும் உட்கொண்டுள்ளன. உவமானத்திற் கூறிய 'சூரியன் ஒளியால்' என்பதைக் கொண்டு உவமேயத்திற் கூறாத, அவ் வொளிக்கு ஒப்பான, 'உன் புகழால்' என்பதும், உவமேயத்திற்கூறிய 'உன்புகழாக்கி' என்பதனால் உவமானத்திற் கூறாத 'தன் ஒளி ஆக்கி' என்பதும், உவமானத்திற் கூறிய (தோன்றாமற் போக்குத லென்னும் பொருளுடைய) 'தவிர்த்தல்' என்பதனால் உவமேயத்திற்கூறாத 'தோன்றாமற்போக்குதல்' என்பதும் வருவித்துப் பொருள்கூறப்பட் டிருப்பது காண்க.

குகன், ஏனைய இராசகுலங்கள் யாவற்றினும் புகழ்மிக்கது பரதன்குல மென்பது குறிக்கப் 'புகழ்ப் பெருமை நுங்கள் மரபு' என்றானென்றும், அப்படிப் புகழ்சிறந்த குலத்திலே தோன்றினோ ரெல்லாருடைய புகழ்களெல்லாவற்றையும் தன்னுளடக்கும்படியான மாப்பெரும் புகழ்படைத்தோன் பரதனென்பதுகருதிக் குகன் அவன் உள்ளக்கிடையை அறிந்தபின் அவனை முதலாவதாக (இதற்கு முந்திய பாட்டில்) விளிக்கும்போது வேறு கூறி விளியாமற் 'புகழினோய்' என விளித்தானென்றும், அவ்விளியினால் அப்புகழின் மேம்பாடு இவ்வளவு சிறந்ததென (இப்பாட்டில்) விதந்து கூறுதற்குத் தோற்றுவாய்செய்தா னென்றும் உய்த்துணரவைத்திருத்தல் நோக்கி நுகர்தற்குரியது.

ஏகனான பரதனது புகழுடம்பு ஏகமான சூரியனுக்கும், அனேக ரான அவன்முன்னோர் புகழுடம்புகள் அனேகமான ஏனைய வான சோதிகளுக்கும், பரதனதுபுகழ் சூரியனது ஒளிக்கும், அவன் முன்னோரது புகழ்களெல்லாம் சகல வானசோதிகளின் ஒளிகளனைத் துக்கும், பரதன்புகழ் அவன்முன்னோர்புகழைத் தன்னுள்ளாக்கி அவைகள் தோன்றாமல் தான்மட்டும் விளங்குதல் சூரியன் ஒளி ஏனைய சோதிகளின் ஒளிகளைத் தன்மயமாக்கித் தான் தனியே பிரகாசித்தலுக் கும், பரதன்முன்னோர்புகழுடம்புகள் விளங்காமல் அவன்புகழுடம்பு பொலிதல் மற்றைய வானசோதிகள்மறையச் சூரியன் துலங்குதலுக்கும், பரதன்புகழுடம்பும் அவன்புகழும் அவன்முன்னோர்புகழுடம்புகளை யும் அவர்களுடைய புகழ்களையும் துலங்காதனவாகச் செய்தனவேயன்றி இல்லாதனவாகச் செய்யாமை சூரியனும்அதன் ஒளியும் மற்றைய வானசோதிகளையும் அவற்றின் ஒளிகளையும் மறைவித்ததன்றி இல்லா தனவாகச் செய்யாமைக்கும், பரதன் புகழுடம்பு தோன்றுமுன் சென்ற அவன் முன்னோர்புகழுடம்புகள் விளங்கிய காலம், சூரியன் தோன்று முன் கழிந்த, மற்றைய வான சோதிகள் துலங்கிய, இராக்காலத்துக் கும், பரதன்புகழுடம்பு விளங்கும் காலம், சூரியன் விளங்கும் பகற் காலத்துக்கும் ஒப்பு. இவ்வாறாக உவமான உவமேயங்களின் ஒற்றுமை கள், ஊன்றிநோக்க நோக்க, மேன்மேல் விளங்கிப் படிப்படியாக அதிகப் படும் ஆனந்தத்தை விளைத்துப் பரவசப்படும்படி கம்பர் இக் கவியை இயற்றியிருத்தல், அவரெதிரே மற்றெல்லாக் கவிஞர்களும் சூரியன் முன் ஏனைய சோதிகள்போல்வாரென்னும் உவமையை நம் உள்ளத்தே உதிப் பிக்கின்றது.

[மேற்கூறியவாறு குகன் பரதனை மனமாரப் புகழ்ந்து அவனுக்கும் பேரன்புடையானானான். அவனுக்கு ஆர்தாம் அன்பு செய்யார். அவனுடைய அருங்குணத்தாலன்றோ, அன்பில் ஈடுபடும் இயல்புடைய இராமன் எவரினும் அவனை இனியனாகக் கொண்டு அவன்பாற் கழிபெருங் காதல் பூண்டான். அவன் இராமன் சென்ற தென்றிசைநோக்கிக் கும்பிட்டுக்கொண்டு "நம் தமையன் எங்கே தங்கி யிருந்தான்?" என்று கேட்கக் குகன் "அதனைக் காட்டுவேன். கூட வருவாய்" என்று சென்றான். பரதனும் சென்று இராமன் படுத்திருந்த இடத்தைப் பார்த்தான். பார்க்கவே பதைபதைத்துப் பாரில் விழுந்து துன்பக் கடலுள் அழுந்திக் கண்ணீர்சொரிந்தான்.]

337. "இயன்றதென் பொருட்டி னாலிவ் விடருனக் கென்ற போழ்தும்,
அயின்றனை கிழங்கும் காயும் அமிர்தென அரிய புல்லில்
துயின்றனை எனவும், ஆவி துறந்திலென்; சுடரும் காசு
குயின்றுயர் மகுடம் சூடும் செல்வமும் கொள்வென் யானே."

இ-ள். "(அண்ணா! என் தாய்,) என் நிமித்தத்தால் (காட்டில் காலந்தள்ளும்) இந்தத் துன்பம் உனக்கு ஏற்பட்டதென்று சொன்ன போது (யான் உயிர்விட்டிருக்கக் கடவேன்: அப்போது உயிர்விடவில்லையாயினும், இப்போது, குகன்) 'காய்களையும் கிழங்குகளையும் நீ அமிர்தம் போல (எண்ணி) அருந்தினாய், (கண்படை கொள்ளல்) கட்டமான புல்லிலே (படுத்துக்) கண்வளர்ந்தாய்,' என்று சொல்லவும் உயிர்விட்டிலேன் (அப்படிப்பட்ட வன்னெஞ்சுடைய) யான் (இனிப்) பிரகாசிக்கும் இரத்தினங்கள் இழைக்கப்பட்டு (விலை) உயர்ந்த கிரீடத்தைச்சூடும் (அரசச்) செல்வத்தையும் (ஏற்றுக்) கொள்வேன் (போலும்" என்று தன்னைத் தான் வெறுத்துக் கூறினான் பரதன்).

"விளங்கும் இரத்தினம் அழுத்தி உயர்ந்த கிரீடம் சூடும் செல்வத்தையும் கொள்ளநின்றேன் (ஆதலால்) 'உயிர்விடேன்" என்பது முந்திய உரை.

இயன்றது—என்றது—ஏற்பட்டது. அயின்றனை—தின்றாய். துயின்றனை—தூங்கினாய். துறந்திலென்—விட்டிலேன். சுடரும்—பிரகாசிக்கும். குயின்று—பதிக்கப்பட்டு. 'என்றபோழ்தும்' 'எனவும்' என்பவை

களில் முந்திய உம்மை எதிரது தழீஇயது; பிந்தியது இறந்தது தழீஇயது. 'என்றபோழ்தும்' என்பதற்கு 'எனவும்' என்றும் 'எனவும்' என்பதற்கு 'என்றபோழ்தும்' என்றும் பொருள்கூறுதல் பொருத்தமாயிருத்தல் காண்க.

[மேற்கூறியவாறு கூறியபின்பு, பரதன், குகனை நோக்கி "நம் தமயன் படுத்திருந்த இடம் இதுவானால், நம் தம்பி இராப்பொழுதைப் போக்கிய தெங்கே என்றான்.]

338. "அல்லை ஆண் டமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச,
வில்லை ஊன் றியகை யோடும் வெய்துயிர்ப் போடும், வீரன்,
கல்லை ஆண் டுயர்ந்த தோளாய்!, கண்கள்நீர் சொரியக் கங்குல்
எல்லை காண் டளவும் நின்றான்; இமைப்பிலன் நயனம்" என்றான்.

இ-ள். "இராமனும் சீதையும் உறங்க, இலக்குமணன், (அவசியம்நேர்ந்தபோது உபயோகிக்கக் கருதிப் பிடித்திருந்த) வில்லை (நிற்றற்குத் துணையாக நிலத்தில்) ஊன்றிய கையினனாய் (இராமனுக்கு நேர்ந்த நிலைமையை நினைந்து துன்புகூர்ந்து, விடுகின்ற) பெருமூச்சினனாய் (அத் துன்பமிகுதியால்) கண்கள் கண்ணீர்பொழியாநிற்க, இராக்காலத்தின் எல்லை (யாகிய விடியலைக்) காணுமட்டும் (காவல் செய்து) கண்கள் இமைகொட்டாமல் (நிலையிலேயே) நின்றான்.

அல்லை ஆண்டு அமைந்த மேனி—இருளை (க் கோபித்துப் போர் செய்து வென்று அடிமையாக்கி) ஆண்டு (அதன்பின்பு கோபம் நீங்கி) அமைதியுற்ற உடம்பு. அழகு-இராமம் (சூடாமணி நிகண்டு) அழகன்-இராமன். துஞ்ச-உறங்க வெய்துயிர்ப்பு-பெருமூச்சு. கல்-மலை கல்லை ஆண்டு என்பதற்கு வில்லைஆண்டு என்பதற்குப்போலப் பொருள்செய்து கொள்க. 'நின்றான்' என்றதனால் படுக்காமையும் 'நயனம் இமைப்பிலன்' என்றதனால் சிறிதும் தூங்காமையும் சொல்லாமற் சொன்னான். "காண்பு என்னுந் தொழிற்பெயர் எச்சத்தில் வந்தது" 'விசும்பிற்றுளி' என்னுங்குறளிற் 'பசும்புற்றலைகாண்பரிது' என்பதிற் 'காண்பு' வருதல் காண்க.

இப்பாட்டில் இலக்குமணனது எல்லையில்லாத இராமபத்தி தொழிற்பட்டமுறைமையை மிகவும் இனிமைபயப்பக் கவி கூறியது கண்டு களிக்கத்தக்கது.

339. "என்பத்தைக் கேட்ட மைந்தன், இராமனுங் கிளையா ரென்று
முன்பொத்த தோற்றத் தேமுள், யான் என்றும் முடிவி லாத
துன்பத்துக் கேது ஆனேன்; அவன் அது துடைக்க நின்றான்;
அன்பத்துக் கெல்லே உண்டே; அழகிதென் அடிமை" என்றான்.

இ-ள். (மேற்கூறியவாறு குகன்) கூறியதைக்கேட்ட பரதன், "இராமனுக்குத் தம்பிமாராய் (ச் செய்தொழில்வேற்றுமையாற் சிறப்பு ஒவ்வாதேம் ஆகும்) முன்பு பிறப்பால் ஒத்தே (மான எம்) முள்ளே, யான் (இராமனுக்கு) என்றும் முடிவில்லாத துன்பத்துக்குக் காரண மானேன். அவன் அத்துன்பத்தை நீக்க (அமைந்து) நின்றான். (அவனுடைய) அன்புக்கு எல்லே இல்லே. (அவன் அன்பு அவ்வளவு சிறந்ததாக,) என் அடிமை (த் தொழில் இருந்தவாறு) நன்றாயிருந்தது!" என்றான்.

இப்பாட்டுப் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா— செய்தொழில் வேற்றுமை யான்" என்ற குறட்கருத்தைத் தழுவியது. செய்யுளாதலால். 'என்பதை' 'என்பத்தை' எனவும் 'அன்பதுக்கு' 'அன்பத்துக்கு' எனவும் தகரம் விரிக்கப்பட்டு வந்தன. "அன்பத்துக்கு அத்துச் சாரியை" என்றும் கூறுவர். இளையாரென்று-இளையாராகி. நீ சொன்னுயென்றுல் என்பது நீ சொன்னுபானுல் எனவும் இராமனென்ற வன் என்பது இராமனுனவன் எனவும் பொருள்படல்போல, இளையா ரென்று என்பது இளையாராய் எனப் பொருள்பட நின்றது. 'இளையா ரென்று' என்பதற்கு 'இளையாரென்று சொல்லப்பட்டு' என்றும் பொருள் கொள்ளலாம். தோற்றம்-பிறப்பு. எல்லேயுண்டே என்பதில் ஏகாரம் எதிர்மறை. அழகிது! நன்றாயிருந்தது! (இகழ்தற்குரியது என்றபடி). 'இளையாரென்ற' என்றும், 'துடைத்துநின்றான்' என்றும் பாடம்.

[பின்பு, அன்றிரவில், பரதன், இராமன் தங்கிய இடத்திலே தானும் தங்கிப் புழுதியிலே படுத்திருந்து பொழுதைப் போக்கினன். குகனே நோக்கி "எங்களேக் கங்கையைக் கடந்து கரையேறச் செய்வாயானல், அது, எங்களே, இராமனே அடையாமையாகிய துன்பக்கடலினின்று கடத்தி அவனே அடைதலாகிய இன்பக் கரையிலேற்றியதாம்" என்றான். குகன் நன்றென்று தோணிகளேத் தருவித்தான்.

அந்தத் தோணிகள், சிவபிரான் வீற்றிருக்கும் கயிலைமலைபோன்றும், அவன் வில்லாக வளைத்த மேருகிரிபோன்றும், குபேரனது விமானம் 'நாம் ஏகமாயிருந்ததனுனன்றே அநேகமான இவைகளை ஒவ்வாமே நாணுற்றேம்' என்று, அநேகரப் பல உருவெடுத்தாற் போன்றும் பெருமையும் அழகும் பொருந்தியிருந்தன. அவைகள், பெரிய கங்காநதியும் இடம் பற்றுதென்னும்படி நெருங்கிநின்றன; இக்கரையிலுள்ளாரை அக்கரையிலும் அக்கரையிலுள்ளாரை இக்கரையிலும் கொண்டு சேர்த்தலால், மண்ணுலகத்துள்ளாரை விண்ணுலகத்தும் அவ் வுலகத்துள்ளாரை இவ்வுலகத்தும் சேர்க்கும் இருவினை நிகரென விருந்தன.

பரதன் ஆணைப்படி, சுமந்திரன் சேனையைத் தோணிகளி லேற்றிச் செல்லச் செய்தபோது, அது, ஆறு கடலிற்செல்லுதலுக்கு மாறுகச் கடல் ஆற்றிற் சென்றதென்னும்படி யிருந்தது. களிறுகள், பிளிறிக் கொண்டு கங்கையாற்றில் இறங்கியபோது, இடியுடைய மேகங்கள் கட லிடையே படிவனவொத்தன. அவைகள் துதிக்கைகளை உயர்த்துக் கொண்டு கங்கையில் நீந்திச்சென்ற காட்சி, பாய்மரத்தோடு கடலிற் செல்லும் மரக்கலங்களின் தோற்றம்போன்றது.

சேனை யேறிய தோணிகள்போகும்வேகத்தால் தள்ளுண்டு அக்கரைநோக்கிச் சென்ற நீரினால், கங்கையும், இராமனைக் காணும் ஆசையால் தென்றிசைநோக்கிச் சென்றதுபோன்றது. மாதர் ஏறிய தோணிகள், இருபக்கத்துத் துடுப்புக்களும் இரண்டு கால்களாகச் செல்பவை, அம் மாதர்பாதந் தீண்டலுற்றதனால் உயிர்பெற்று நடப்பன ஒத்தன.]

இதன்பின்வரும் எட்டுப்பாட்டுக்கள் அடங்கிய பகுதி கம்பர் கவித் திறத்தைக் காட்டும் சிறந்த பகுதிகளுள்ளே சிறந்தவற்றுள் ஒன்றென் பதைக் கற்றுணர்ந்தவரும் ஒருமனமாக ஒப்புக்கொள்வர். இப்பகுதியே எப்பகுதியினுஞ் சிறந்ததென்பாரும் உளர்.

இப்பகுதியில் அடங்கிய 'சுற்றத்தார்' முதலிய ஆறுபாட்டுக்களிற் கூறப்பட்டுள்ள மிகக விருப்பும் வியப்பும் விளைக்கும் கருத்துத் தொகுதி கம்பசிருட்டியோ, வான்மீகி கூறியுள்ளதோ வென்று யான் விசாரித்த

போது, இதன்மூலம் வான்மீக ராமாயணத்தில் ௯௨-ம் சருக்கத்தில், பாத்துவாசமுனிவனது வினவுக்கு விடையாக அவனுக்குப் பரதன் தாயர் மூவரையும் இன்னுளின்னுளெனக் கூறிய பகுதியென்று தெரியலானேன். அந்தப்பகுதியின்மொழிபெயர்ப்பு, பண்டித நடேசசாஸ்திரியாரால் செய்யப்பட்டிருக்கிறபடி, "பகவானே! எளியவரர்கவும், சோகத்தாலும் உபவாசத்தாலும் இளைத்தவராகவும் காணப்படுகின்ற தந்தையின் பட்டமகிஷியான கௌசலையென்ற பேரையுடைய இவர், விஷ்ணுவை அதிதிதேவி பெற்றதுபோல், பராக்கிரமத்துடன் கூடியிருக்கும்படி சிங்கம்போற் செல்லும் நடைபொருந்திய மனிதப்புலியாகிய அந்த இராமனைப் பெற்றுர். இக் கௌசலையாருடைய இடக்கையைப் பிடித்துக் கொண்டிருப்பவரும், வருத்தமடைந்த மனத்தையுடைமையாற் காட்டின் நடுவில் வாடிய பூக்களையுடைய கர்ணிகாரவிருக்ஷக்கிளைபோன்றவருமான இத்தேவியின்குமாரர்தாம், அசுவினீதேவர்களை யொத்தவர்களும், வீரர்களும், உண்மையில் உறுதிகொண்டவர்களுமான லக்ஷ்மண சத்துருக்கனர்கள் எவருடைய காரணமாக, அவ்விரு புருஷப் புலிகளும் உயிர்மாய்தற்கொத்த ஆபத்தை இக் காட்டில் அடைந்திருக்கின்றுர்களோ, புதல்வரையிழந்த தசரதமன்னரும் சுவர்க்க மடைந்தாரோ, அப்படிப்பட்ட கோபகுண முள்ளவரும், திருத்தப்படாத புத்தியை யுடையவரும், கருவமடைந்தவரும், கட்டழகியாகத் தம்மைக் கருதுபவரும், செல்வத்திற் பேராசைகொண்டவரும், பெருந்தன்மை யற்றவரும், பெருந்தன்மையுடையவர்போலத் தோன்றுபவரும், கொடியவரும், பாவத்திற் கருத்தூன்றியவரும், கைகேயியென்ற பெயருடையவருமான இவரை எனது தாயாக அறிமின். இவரால்தான் எனக்குப் பெரிய விசனம் நேர்ந்ததென் றெண்ணுகின்றேன்" என்பது. இருகவிகள்கூற்றினும் இடமும் வினவியோனும் வேறுபடல் வெளிப்படையானது. ஏனைய வேறுபாடுகளையும் ஒற்றுமைகளையும், இருவர் கூற்றுக்களையும் ஊன்றி ஒப்புநோக்கி உய்த்துணர்ந்துகொள்க.

பரதர் முதலியோர் தோணி யேறிச் செல்லல்.

340. தன்னன தம்பியும் தாயர் மூவரும்
சொன்னதேர் வலவனும் தூய தோழனும்
துன்னினர் ஏறலும், துழா துடுப்பெனும்
நன்னயக் காலினல் நடத்தல் மேயினன்.

இ-ள். பரதன், தன் தம்பி சத்துருக்கனும், தாய்மார் (கோசலை, கைகேயி, சுமித்திரை யென்பார்) மூவரும், மந்திரி சுமந்திரனும், தோழன் குகனும் தான் ஏறிய தோணியில் ஏறினவுடனே, அவர்களோடு கங்கை யாற்றிற் செல்வானாயினன்.

தன்னன - தன்(னை). அன்ன - தன்னையொத்த. தேர்வலான், சுமந்திரனைச் சுட்டியது. தோழன், குகனைக்குறித்தது. துழாதுடுப்பு, வினைத்தொகை நிலைத்தொடர்; துழாவும் துடுப்பெனவிரியும். துழாவுதல்-தண்டுவலித்தல்.

தோணியிற் சென்றான் எனபதைத் துடுப்பெனும் காலினால் நடந்தான் என்று கூறிய நயம் கவனிக்கத்தக்கது. இவ்வாறே "பிறர் காலால் இயங்கும் மாது" என்று சிவிகை யேறிச் சென்ற மாயையைச் சிவப் பிரகாசர் கூறியது, இக்கருத்துத் தூண்டக் கூறியதுபோலும்.

கோசலா தேவியை "யார்?" என்று குகன் கேட்கப் பரதன் கூறுதல்.

341. சுற்றத்தார் தேவரொடு தொழ நின்ற கோசலையைத்
தொழுது நோக்கி,
"வெற்றித்தார்க் குரிசில்! இவர் ஆர்? என்று குகன் வினவ,
வேந்தர் வைகும்
முற்றத்தான் முதல் தேவி, மூன்றுலகும் ஈன்றானை
முன் ஈன்றானைப்
பெற்றத்தால் பெறுஞ் செல்வம் யான் பிறத்த லால் துறந்த
பெரியாள் " என்றான்.

இ-ள். (பரதனோடு இராமனைக் காண வந்த) உறவினரும் (பரதன் இராமனைக் காணச் செல்வதைப் பார்க்க வந்த) தேவர்களும் (தன்னை நோக்கிக்) கும்பிடா நிற்க (த் தோணியிலே) நின்று கொண்டிருந்த கோசலா தேவியைக் குகன், கும்பிட்டுக் கொண்டு பார்த்து, "அரசே! இவர் யார்?" என்று கேட்க, (ப் பரதன், "கண்டு தொழச் சமயம் நோக்கிக் காத்துக்கொண்டு) அரசர்கள் தங்கியிருக்கப் பெற்ற முற்றத்தையுடைய தசரத சக்கரவர்த்தியின் முதல் மனைவி, மூன்று

உலகங்களையும் பெற்ற பிரமதேவரைப் பெற்ற (ஸ்ரீமந் நாராயண மூர்த்தி யாகிய) இராமனைப் பெற்றதனால் அடைந்த செல்வத்தை நான் (ஒரு பாவி) பிறந்ததனால் இழந்த பெருந் தகைமை உடையாள்" என்றான்.

தார் - மாலை. குரிசில், அண்மைவிளி. பெற்றதால், பெற்றத்தாலெனத் தகரம் விரிக்கப்பட்டுவந்தது. 'சுற்றத்தால்' என்னுங்குறளில் 'பெற்றத்தால்' என்பது பிரயோகிக்கப்பட்டிருப்பது காண்க.

சாமானிய ரல்லாத உயர்ந்த அரசரான சுற்றத்தாரே யன்றித் தேவரும் தொழுது கொண்டிருக்கும் ஒருவரைத் தெரிய விரும்புவோர், அவரைக் கைந் நீட்டிச் சுட்டிக்காட்டி "இவர் யார்?" என்று கேட்டல் தகாத முறையென்று கூறுமற் கூறித், தக்க முறை இது வென்றுணர்த்துவாராய்க் "கோசலையைத் தொழுது நோக்கி..........இவர் ஆர்? என்று குகன் வினவ" என்றார்.

மேலும், 'இவர் ஆர்' என்றகேள்விக்குத் 'தசரதனுக்கு தேவி' 'இராமனுக்கு தாய்' என்ற விடைகள் இயல்பான விடைகளா யிருக்க, அவ்விடைகளை அவ்வாறேகூறாது, அவற்றைக் கூறுமுகத்தால், 'வேந்தர் வைகும் முற்றத்தான்' எனத் தசரதனைச் சிறப்பித்தும், 'முதற் றேவி' எனக் கோசலையை மேம்படுத்தியும், 'மூன்றுலகும் ஈன்றானை முன் ஈன்றாள்' என இராமனை விதந்தும் கூறுவானேன்? எனில்,—அக் கேள்வி கேட்ட சமயத்தில், கோசலா தேவியைச் சுற்றத்தாரும் தேவருந்தொழுத வண்ணமா யிருந்தன ராதலால், அத் தேவியைக் கைந் நீட்டிக் காட்டலாற் சுட்டாது, கைகூப்பி நோக்குதலாற் சுட்டின குகன், 'சுற்றத்தார் தொழுவானேன்?' 'தேவர் தொழுவானேன்?' என்று தெரிய விரும்பினனென்பது ஊகித் துணர்தற்பாலது. இவ் வாறாகக், குகன், கேளாது கேட்ட கேள்விகளுக்கு விடைகளாகப் பரதன், 'அரசர் வணங்கும் சக்கரவர்த்தியாகிய தசரதனது பட்டமகிஷியாதலால், சுற்றத்தார் தொழுகின்றார்கள்; மகா விட்டுணுவின் அவதாரமான இராமனைப் பெற்றவளாதலால், தேவர்கள் வந்தனை செய்கிறார்கள்' என்று தெரிவிக்க, அவ்வாறு விசேடித்துக் கூறினனென்க.

இன்னும், 'இவர் ஆர்?' என்ற வினவுக்குச் 'சக்கரவர்த்தியாகிய தசரதனுக்குப் பிரதமநாயகி, திருமாலாகிய இராமனுக்கு மாதா' என்று கூறியதன்மேல், இராமனைப் "பெற்றதாற்பெறும். செல்வம் யா...

பிறத்தலால் துறந்த பெரியாள்" என்று பரதன் ஏன் கூறினனெனில், அவன்மேற்கூறிய விடைகளை அளிக்கும்போது, கோசலாதேவி முன் இருந்த ஆனந்தநிலையும் இப்போது உள்ள துக்கநிலையும் அவன் மனத்தில் இயல்பாகத் தோன்றி வருத்தம் செய்ய, 'ஐயோ! நான் ஒரு பாவிபிறவாதிருந்தால், இவ் அன்னையாருடைய ஆனந்தநிலை மாறியிராதே." என்ற எண்ணம் தோன்ற, அதனை அவசனுய் வெளியிட்டுக் கூறினனென்க.

இனி, பரதன் தான் பிறந்ததனால் கோசலாதேவி செல்வத்தையிழந்தா ளென்றது, தான் பிறக்கவில்லையானால், தனக்காகத் தன் தாய், தசரதன் இராமனுக்குக் கொடுத்த இராச்சியத்தைப் பிடுங்கிக்கொண்டு இராமனைக் காட்டுக்கு ஓட்டியிராளென்றும், அவள் அவ்வாறுசெய்யாதிருக்கவே, கோசலாதேவி தசரதன் இறவாதிருக்கும் மாங்கலியப் பாக்கியத்தையும் இராமன் முடிசூடியாளும் இராச்சியச்செல்வத்தையும் இழந்திராளென்பதையும் குறிப்பித்தது.

## குகனை "யார்?" என்று கோசலை கேட்கப் பரதன் கூறுதல்.

342. என்றலுமே, அடியின்மிசை நெடிதுவீழ்ந் தழுவானை
"இவன் யார்" என்று
கன்று பிரி காராவின் துயருடைய கொடிவினவக், கழற் கால் மைந்தன்,
" இன் துணைவன் இராகவனுக் கிலக்குவற்கும் இளையவற்கும் எனக்கும் மூத்தான்,
குன்றனைய திரு நெடுந்தோட் குகனென்பான் இந்நின்ற குரிசில்." என்றான்.

இ-ள். பரதன் கோசலாதேவியை இன்னாள் என்றவுடனே, தன் அடியில்விழுந்து நெடும்பொழுது (தொழுது கிடந்து) அழுதுகொண்டிருந்த குகனை "இவன் யார்?" என்று கோசலாதேவி கேட்கப் பரதன், "இவன், இராமனுக்குத் தம்பி, இலக்குமணனுக்கும் சத்துருக்கனுக்கும் எனக்கும் தமையன், குகன் என்ற அரசன்" என்றான்.

நெடிது-நெடுநேரம். 'நெடிதுவீழ்ந்து' என்பதற்குத் 'தீர்க்கதண்டஞ்செய்து' என்றும் பொருள்கொள்ளலாம் கா ரா-பெரியபசு; காராம்பசு.

கொடி, பூங்கொடிபோன்ற கோசலையைக் குறித்தது. கழல்-வீரகண்டை இங்நின்ற-இவ்விடத்துநின்ற. குரிசில்-தலைவன்; அரசர்.

ஒரு பெரியோர் இன்னரெனத் தெரிவிக்கப்பட்ட ஒருவர் அப் பெரியாரை வணங்குதல் முறையா மென்பதை "என்றலுமே அடியின் மிசை நெடிது வீழ்ந்து" என்றதனால் உணர்த்தினர்.

"கோசலாதேவியீரே? உமது கணவனர் காலஞ்சென்றரே! மகனும் காட்டிலுறையும்படி விதி யிருந்ததே"! என்று ஒரு சக்கரவர்த்தினிபால் துக்கம் விசாரித்தல் அநாகரிகமென்பது கூறவேண்டுவதில்லை. துன்புற்ற அன்பரைச் சந்தித்த அன்பர் இயல்பாக அழுதல் தம்மையறியாமலே துக்கம் விசாரித்தலாமென்பது விளங்கக் குகன் துக்கங் கொண்டாடுதலை, 'அழுவானை' என்ற ஒரே சொல்லாற் சுருக்கமாகவும் துலக்கமாகவும் சூசிப்பித்த சொற்சாதுரியம் துதித்துக் கொண்டாடத் தக்கது.

'இவன் யார்?' என்ற கேள்வியில், "அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்? ஆர்வலர்—புன்கணீர் பூசல் தரும்" என்றவாறு, 'இவன் இப்படி அழும் அன்புடைமைக்குக் காரணம் யாது?' என்ற குறிப்புவினு அடங்கியுள்ளது. ஆகவே, பரதன் அக் காரணத்தை முதற்கண்ணே தெரிவித்து விடுவானப் 'உன்புத்திரன்' என்று உணர்த்த 'இன் துணைவன் இராகவனுக்கு' என்றான்.

'மூத்தான்' என்பது பின் வரப்பெற்றதனால், 'துணைவன்' என்பது, தனுக்குரிய 'சகோதரன்' என்றபொருள் பயந்த மட்டில் நில்லாமல், 'இளையசகோதரன்' என்ற பொருளைக் குறிப்பித்தது. இராமன் குகனைத் தோழனாகவும் சகோதரனாகவும் ஒருங்கே கொண்டானென்பதைத் 'தோழன்' 'சகோதரன்' என்ற இருபொருளுமுடைய 'துணைவன்' என்றதனாற் குறிப்பித்தான்.

பரதன், இலக்குமணன் சத்துருக்கன் இருவருக்கும் மூத்தவனுயிருந்தும், தன்னை இறுதியில்வைத்துக்கூறிய விநயம் கொண்டாடத் தக்கது.

முற்பாட்டில், பரதன், கோசலாதேவியை இன்னளெனக் கூறிய போது, 'கோசலை' யெனப் பெயர்கூறுதுவிடுத்ததும், இப்பாட்டில்,

அவன் குகனை இன்னானென்றுகூறுங்கால், 'குகன் என்பான்' எனப் பெயர்கூறியதும், முறையே, தசாதன் குடும்பத்தாரெல்லாருடைய பெயர்களையும் குகன் முன்னரே அறிந்திருந்ததனாலும், குகனைப்பற்றிக் கோசலாதேவி இதுகாறும் ஒன்றும் அறியாதிருந்ததனாலும் என்பது கவனிக்கத்தக்கது. சுமித்திராதேவி கைகேயிதேவிகளை யின்னாளின்னா ளெனக் கூறும் பிந்தியபாட்டுக்களில், அத்தேவிமார் பேர்கள், மேற் காட்டிய காரணத்தாற் கூறப்படாதிருப்பதை நோக்குக.

### கோசலாதேவி மக்களுக்குத் துக்கமாற்றி வாழ்த்துக்கூறுதல்.

343. "நைவீ ரலீர் மைந்தீர்! இனித்துயரால் நாடிறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவும் நலமாயிற் றாமன்றே: விலங்கற் றிண்டோட்
கைவீரக் களிறனைய காளையிவன் தன்னோடும் கலந்து, நீங்கள்
ஐவீரும் ஒருவீராய் அகலிடத்தை நெடுங்காலம் அளித்திர்" என்றாள்.

இ-ள். (கோசலாதேவி, பரத சத்துருக்கரை நோக்கிப்) "பிள்ளை களே! (இவனை உங்கள் சகோதரனாகப் பெற்றுள்ளீர்களாதலால், நீங்கள்) இனிமேல், துன்பத்தால் வருந்தற்பாலீரல்லீர். இராமலக்குமணர் நாடு நீங்கிக் காடு சேர்ந்தது (என் மக்கள் நால்வரில் இருவரை இழக்கும்படி செய்த கேடு என்றிருந்தேன்; அஃது, அவ்வாறின்றி, நால்வரை ஐவ ராக்கிய) நன்மையாயிற்று. இவனோடுசேர்ந்து நீங்கள் ஐந்து சகோதா ரும் (மன ஒற்றுமையால்) ஒருவரே போன்று விசாலமான பூமியை நெடுங்காலம் அரசாள்வீராக" என்று ஆசீர்வதித்தாள்.

நைவீரல்லீர்-வருந்துதலொழியுங்கள். மைந்தீர்-மைந்தரே. நாடு இறந்து-நாடுகடந்து. மெய்வீரர்-உண்மையையுடைய வீரான இராம லக்குமணர். ஆம், அன்று, ஏ, அசைகள். விலங்கல் திண்தோள் கை வீரக் களிறு அனைய காளை இவன்-மலைபோலுந் திண்ணிய தோளை யுடையவனும் துதிக்கையுடைய வீரம்பொருந்திய ஆண்யானைபோன்றவ னும் காளைப்பருவமுடையவனுமான இந்தக் குகன். ஐவீரும்-நீங்கள் ஐந்துபேரும். ஒருவீராய் (ஒற்றுமையால்) ஒருவரேபோன்று. ஆய்-போன்று. அகலிடம்-பூமி. அளித்திர்-காவல்செய்யுங்கள்.

கோசலாதேவி, குகன் இராமனுக்குத் துணைவன் என்று தெரிந்த வுடனே, அந்நியன் தன்னவனானதுபற்றி இமைப்பொழுதும் ஒருசிறி தும் திகைக்காமல், அவனைப்பெற்று நெடுங்காலம்வளர்த்த தாயின்

தன்மை யுடையளாகித், 'தான் சக்கரவர்த்தினி, அவன் கேவலம் வேடர் தலைவன்' என்ற உயர்வு தாழ்வு ஓர் அணுவளவுந் தோன்றுதொழியத் தாய்மை பாராட்டி, அவன் அழுததற்கு ஆற்றுதலும் தொழுததற்கு வாழ்த்துதலும் செய்த சாதுரிய நிருவாகம் "அரசரிற் பிறந்துபின் அரசரில் வளர்ந்து — அரசரிற்புகுந்து போரசியான" அத் தேவியினது உயர்ந்த பிறப்பு வளர்ப்பு முதலிய மேம்பாடுகளை உணர்த்துதல் ஊன்றி நோக்கி உவத்தற்குரியது.

இப்பாட்டும் இதற்குமுந்திய இரண்டுபாட்டுக்களும், கம்பர், அரசர் பலரோடும் அவர்களுடைய குடும்பத்தார் சுற்றத்தாரோடும் நீண்டகாலம் நெருங்கிப் பழகி, அவர்களுடைய பழக்க வழக்க ஒழுக்கம் அனைத்தும் நன்கறிந்தவரென்பதைக் குறிப்பனவாக இருத்தல் கவனிக்கத்தக்கது.

பரதன் சுமித்திராதேவியைக் குகனுக்குத் தெரிவித்தல்.

344. அறம்தானே என்கின்ற அயல்நின்றாள் தனைநோக்கி, "ஐய! அன்பின்
நிறைந்தாளை உரை" என்ன, "நெறிதிறம்பாத் தன் மெய்யை நிற்ப தாக்கி
இறந்தான் தன் இளம் தேவி, யாவர்க்கும் தொழுகுலமாம் இராமன் பின்பு
பிறந்தானும்உளன்என்னப்பிரியாதான் தனைப்பயந்தபெரியாள்" என்றான்.

இ-ள். (கோசலாதேவியின்)பக்கத்தில்நின்ற, தருமமே (அன்றி வேறல்லள்) என்று சொல்லப்பட்ட—தருமம் உருவெடுத்தாற்போன்ற சுமித்திராதேவியைக் குகன் நோக்கி "ஐயனே அன்புநிறைந்த இவளை (இன்னாளென்று) உரைப்பாயாக" எனப், பரதன், "முறைதவறாத் தனது உண்மையை நிலைநிறுத்தி (அதற்காக) மரணமடைந்த தசரதனது இளையமனைவி, 'இராமனுக்குத் நம்பி உண்டு' என்று சொல்லும்படி அவனைப் பிரியாத இலக்குமணனை ஈன்ற மகிமையுடையாள்" என்றான்.

யாவருக்கும் தொழுகுலம் ஆம் இராமன்-எல்லாருக்கும் (அவர்கள்) வணங்கும் குலதெய்வம்போன்ற இராமன். ஆம்-போலும். தொழுகுலம், என்பதற்கு வேறுபொருள் விளங்கவில்லை. குலதெய்வமென்பதைக் குலமெனச்சுருக்கிக் கூறினார்போலும் 'அறந்தானேயென நின்றாள்' என்றும் பாடம்.

தன் பர்த்தாவும் சக்கரவர்த்தியுமான தசரதனது ஆணையை அநுசரித்துக் கோசலாதேவி தன் குமாரன் இராமனைக் காட்டுக்குச் செல்ல மனவருத்தத்துடன் விடைகொடுத்து விடுத்தாள். சுமித்திரா

தேவியோ, அப்படிப்பட்ட ஆணை ஒன்றும் இல்லாதிருக்கவும், அன்பினுல் தூண்டப்பட்டு, இராமனைக் காக்க அவனுக்குத் துணையாகத் தன் புத்திரன் இலக்குமணனைக் காட்டுக்கு மனம் உவந்து அனுப்பினுள். அவள் அத்தகைய அசாதாரண அறச்செயல் ஆற்றிய அரும் பெருந் தகையாளாதலை அறிவிக்க, அவளை 'அறந்தானே யென்கின்ற' என்ற அடைமொழியால் விசேடித்து மேம்படுத்துக் கூறினர்.

தசரதருக்கு மூன்றுந்தாரமான சுமித்திராதேவியை 'அயல் நின் ருள்' என்றதனுல், இரண்டாந்தாரமான கைகேயிதேவி கோசலாதேவிக் குப் பக்கத்தில் நில்லாமல், தான் செய்த கொடுமையை நினைவுகூர்ந்து தூரத்தில் விலகிநின்ருளென்பதை உய்த்துணரவைத்தார்.

குகன் தான் முன் அறியாத சுமித்திராதேவியை 'அன்பின் நிறைந் தாள்' என்றது, அத்தேவியினது அகத்தில் உள்ள பரிபூரணமான அன்பை அவள் முகம் அடுத்தது காட்டும் பளிங்குபோற் காட்டக் கண்டதனு லெனக.

தசரதனது சத்தியம், கைகேயிதேவி, பரதன் நாடாளவும் இராமன் காடேகவும், அவன்பால் வரங்கள்கேட்கும்வரை மாருதிருந்ததென்பது குறிக்க 'நெறிதிறம்பாமெய்' என்றும், அதனை அவன் என்றும் மாருத தாகச்செய்தது குறிக்கத் 'தன் மெய்ம்மை நிற்பதாக்கி' என்றும் கூறினன்.

உண்மையைத் துறத்தலாதல் உயிரைத் துறத்தலாதல் இரண்டி லொன்று செய்தே தீரக்கடவதாக உற்ற தரும சங்கடமானசமயத்திலே உயிரினும் உண்மை ஓம்பற்குரியதென உய்த்துணர்ந்து உண்மையைக் காக்க உயிரை நீத்த சத்திய விரதன் தசரதனென்பதை, 'மெய்யை நிற்பதாக்கி இறந்தான்' என, நயம் பட உரைத்தான்.

இராமனைத் தனியாகப் பார்ப்போருக்கு, அவனுக்குச் சகோதா ருண்டோ இல்லையோ என்ற உணர்ச்சி இயல்பாக உண்டாகாது. அவனை இலக்குமணனுடன் காண்போருக்கோ, முகவடிவ ஒற்றுமை முதலியவை காரணமாக 'இருவரும் சகோதரர், இராமன் தனியாகப் பிறந்தவனல்லன், தம்பி உடையவன்' என்ற நினைவு, அவர்களுடைய முயற்சியின்றித் தானே தோன்றும். எப்போதும் இராமனைப் பிரியாமையாலன்றே, 'இளையவன்,' 'இராமாநுசன்' என்பவை, பரதனையாதல் சத்துருக்கனை

யாதல் உணர்த்தாமல், இலக்குமணனையே குறித்து வழங்கலுற்று அவ னுக்குப் பெயராயின. இந்த விரிந்தகருத்துக்களை 'இராமன் பின்பு பிறந்தானும் உளன் என்னப் பிரியாதான்' என்ற சுருங்கியமொழிக ளால் இனிது விளங்கக் கூறிய நயம் பாராட்டற்பாலது. (இராமாநுசன் இராம அநுசன்-இராமன் தம்பி)

## கைகேயிகொடுமை வருணனை.

345. சுடுமயா னத்திடைதன் துணைவகத் தோன்றல் துயர்க் கடலின் வகக்
கடுமையார் கானகத்துக் கருணை ஆர் கலிவகக் கழற்கால் மாயன்
நெடுமையால் அன்றளந்த உலகெல்லாம் தன்மனத்தே நினைந்து செய்யும்
கொடுமையால் அளந்தாளை "யார் இவரென் றுரை" என்னக்குரிசில் கூறும்.

இ-ள். தன் உயிர்த் துணையான கணவன் (உயிரற்ற பிணங்களைச் சுடும்) சுடுகாட்டை அடையவும், தன் புத்திரன் துன்பக்கடலில் முழுக வும், கருணைக்கடலான இராமன் கடினமான (கற்களும் முட்களும் மிகுந்த) காட்டிற்செல்லவும், அக்காலத்தில் நெடுமால் திருவடி நெடுமை யால் அளந்த உலகங்கள் அனைத்தையும் (இக்காலத்தில்) தான் செய்த கொடுமையால் அளந்த கைகேயியை "இவர் யார் என்று கூறும்" எனக் குகன் வேண்டப், பரதன் கூறுவான்.

துணை-கணவன் (சிலப்பதிகாரம்) வாழ்க்கைத்துணை, துணையெனச் சுருக்கிக் கூறப்பட்டது. தோன்றல்-மகன். கடுமை-கொடுமை; வன்மை. ஆர்கலி - சமுத்திரம் கருணை ஆர்கலி - கிருபாசமுத்திரமான இராமன். கழல்-வீரகண்டை. 'நின்றளந்த' என்றும் 'தன்மனத்தானினைத்துச் செய்த' என்றும்பாடம்.

கைகேயி செய்தகொடுமை, அறியாதுசெய்ததன்று; ஆராய்ந்து துணிந்து அறிவொடுகூடிச்செய்ததென்பது குறிக்கத் 'தன் மனத்தே நினைந்து செய்யும் கொடுமை என்றார்.

திரிவிக்கிரமாவதார மெடுத்து ஈரடியால் மூன்றுலகங்களையும் அளந்த காலத்தில், திருமாலின் பாதம் பரவாத இடம் எங்குமில்லை; (எங்கும் எல்லாராலும் உணரப்பட்டதனால்,) கைகேயியின் கொடுமை பரவாத இடமும் எங்குமில்லை; என்ற கருத்து இனிது விளங்க, 'மாயன்நெடுமையால் அளந்த உலகெல்லாம் கொடுமையால் அளந்தாள்' என்று கூறிய கவிசாதுரியம் கண்டு களிக்கத் தக்கது.

திருமாலும் கைகேயியும் வரங்கேட்டபோது மெல்லியாகக் காணப்பட்டனர்; வரங்களும் எளியனவாகத் தோன்றின; கொடுத்தவரங்களை நிறைவேற்றும்படி வற்புறுத்தியகாலத்தில் இருவரும் வன்மைகாட்டினர்; வரங்களின்வன்மையும் வெளியாயின; திருமாலின்வன்மை நெடுமையாகவும் கைகேயியின்வன்மை கொடுமையாகவும் உருக்கொண்டன; அந்த நெடுமையும் கொடுமையும் வரங்கொடுத்தாரை மண்வாழ்க்கையைத் துறக்கச்செய்தன; என்று உவமான உவமேயங்களின் ஒற்றுமை நயத்தை ஊன்றி உணர்ந்து உவகை உறுக.

ஸ்ரீ ச. சோமசுந்தரபாரதியவர்கள் இயற்றியுள்ள 'தசரதன்குறையும் கைகேயிநிறையும்' என்ற நூலைப்பற்றி யான் அவர்களுக் கெழுதியதும் அவர்கள் அந் நூலோடு வெளியிட்டிருப்பதுமான கடிதத்தில் இப் பாட்டு அவர்கள் நூலின் உட்கோளுக்குப் பொருத்தமாகக் கைகேயியிக்கு அநுகூலமாக ஒருவாற்றாற் பொருள்கோடற் கிடந்தருவதாயுள்ளதென்று யான் விரித்து விளக்கியிருக்கும் பகுதி இங்கே எடுத்துக்கூறுதற்குரியது. அது, "கைகேயி, நிலையில்லாத பூதஉடம்பழிந்து அது காரணமாக நிலையான புகழுடம்பைத் தசரதன் அடையச் செய்தாளெனவும், தன்மகன் தன்னால் உற்ற துன்பத்தினால் அவனுடைய உத்தம குணங்கள் வெளிப்பட்டு விளங்கச்செய்தாளெனவும், இராமனை வனத்துக்கனுப்பியதனால் அவன் பிரதாபம் பெருகச்செய்தாளெனவும், மாவலியின் ஆட்சியிலிருந்த மண்ணையும் விண்ணையும் ஈரடியாற் கொண்டு மூன்றும் அடிக்கிடமாக அம்மாவலியையாக்கிக்கொண்ட திருமாலின் நெடுமை தோற்றத்தில் கொடுமைபாயும், உண்மையில் அவன் திருவடியை அடைந்த எல்லா முத்தர்களையும்போல அம் மாவலி அவனுக்குரியன யாவற்றையும் தியாகஞ்செய்தாலன்றி யடையொணாத அத் திருவடிக்கீழ் அவனை அவ்வாறு தியாகஞ்செய்பச்செய்து இருத்தின அருளாயும் இருப்பது போலத், திருமாலின் நெடுமைபுடன் உவமிக்கப் பெற்ற கைகேயியின் கொடுமையும் தோற்றத்திற் கொடுமைபாயும் உண்மையில் அருளாயும் இருப்பதாமெனவும்" கொள்ளலாமென்பது.

### பரதன் குகனுக்குக் கைகேயியைத் தன் தாய் எனல்.

346. "படர்எலாம்படைத்தாளைப்பழிவளர்க்கும்செவிலியைத்தன்பாழ்த்தபாவிக்
குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கும் உயிர்ப் பாரம் குறைந்ததேய

உடர் எலாம் உயிர்இலா எனத்தோன்றும் உலகத்தே ஒருத்தியன்றே
இடர்இலா முகத்தாளை அறிந்திலையேல், இங்நின்றாள் என்னை ஈன்றாள்".

இ-ள். "துன்பங்களெல்லாவற்றையும் உண்டாக்கியவள், பழிச் சொல் (ஆன குழந்தைக்கு) வளர்க்கும் தாயானவள், தன் பாழான பாதகக்குடலிலே நீடித்தகாலம் கிடந்த எனக்குங்கூட உடம்பு மெலிந்து தேய்ந்துபோம்படியாக, (மேற் கூறிய துன்பங்கள் காரணமாக) எல்லாருடைய உடல்களும் உயிரில்லா தவைபோலக் காணப்படுகின்ற உலகத்திலே துக்கமில்லாதமுகத்தாள் (ஒருத்தியே, அந்த) ஒருத்தியை (இன்னாளென எளிதாக ஊகித் தறியலாம்,) அறிந்திலையாயின், (சொல்கின்றேன்,) இங்கு நிற்கின்றவள் என்னைப் பெற்றவள்."

படர்—துன்பம். செவிலி—வளர்க்கும் தாய். பாழ்த்த—பாழை யுடைய—பாழான. பாழ்—அழிவு; கெடுதி. உயிர்ப் பாரம்—உயிருக் குப் பாரமான தேகம். இடர்—துன்பம், உடல் குடல் என்பன உடர் குடர் என விகாரப்பட்டன. 'அறிந்திலையோ' என்றும் பாடம்.

இராமனைக் காட்டுக்கு அனுப்பித் தசரதனை இறக்கச் செய்ததனால், உலகத்தா ரெல்லாருக்கும் உண்டான துன்பங்க ளனைத்துக்கும் காரண மாயுள்ளாளென்பான் 'படரெ லாம்படைத்தாள்' என்றான்.

'தான் செய்தது கொடுமை' யென்று தெளிந்து, 'இக்கொடுமை யைச்செய்தேனே!' என்று இரங்கிப் பச்சாத்தாபப்படா திருக்கின்றாள்; ஆதலால் அக்கொடுமையால் உண்டான பழியைத் தன் நடக்கையால் தணியாமல் வளர்ப்பாளாயிருக்கின்றாள் என்பான் 'பழி வளர்க்கும் செவிலி' என்றான். பழிக்கு வளர்த்ததாய் என்றதனால், துன்பத்துக் குப் பெற்றதாய் என்பதை உய்த்துணரவைத்தான்.

உலகத்தாருக்குத் துன்பம், கைகேயி வாயில் (இராமனைக் காட்டுக் குப் போகச்சொல்லியபோது) பிறந்தது; கைகேயிக்குப் பழிச்சொல், உலகத்தார்வாயில் (பாவி இப்படிச்சொல்வாளா! என்றபோது) பிறந்தது; மேலேகூறியவாறு கைகேயியின் பின்நடக்கை, அப்பழிச்சொல்லை வளர்ப்ப தாயிற்று: ஆதலால், உலகத்தாருடைய துன்பத்துக்குப் பெற்றதாயாக வும், பழிச்சொல்லுக்கு வளர்த்ததாயாகவும் கைகேயியைக் கூறியது பொருத்தமாயிருத்தல் காண்க.

'இக் கொடியாளுடைய கொடியவயிற்றில் நெடுங்காலம் கொடுமை நன்கு ஊறித் தோயும்படி அழுந்திக்கிடந்த யானே இவள்கொடுமையைப் பொறுக்கமுடியாமல் உடம்புமெலிந்து தேய்ந்தேனென்றால், ஏனையோர் எவ்வாறு சகிப்பர், எவ்வளவு இளைப்பார் என்று ஊகித்தறிதி' என்பான், 'பாழ்த்த பாவிக்-குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கும் உயிர்ப்பாரம் குறைந்து தேய' என்றான்.

"ஒருநாலு பேர்சுமக்கும்முட்டை-நான்-ஒருவனே சுமப்பன் இந்த உடல் மாயக் கூட்டை" என்றவாறு எல்லா உயிர்களுக்குமே சுமையான உடல், துன்பம் உற்ற உயிர்களுக்கு விசேடமாகச் சுமையாயிருக்குமென்பது விளங்கத் துக்கம் மிக்க பரதன், உடலை 'உயிர்ப்பாரம்' என்றது இயல்பானது.

எல்லாருக்கும் உயிர்போன்ற இராமன் பிரிந்துபோனதனால், எல்லாரும் உயிர்பிரிந்து இறந்தார்போன்றா ரென்பான், 'உடரெலாம் உயிரிலா எனத்தோன்றும்' என்றான்.

உலகத்திலே மற்றெல்லாரும், இராமன் பிரிவாலும் தசரதன் சாவாலும் துக்கமுற்றவர்கள்; கைகேயி ஒருத்திமட்டும் துக்கமுறாதவள் என்பான், 'உலகத்தே ஒருத்தியன்றே இடர் இலா முகத்தாள்' என்றான்.

இவ்வாறாகப், பரதன் கைகேயியைக் குகனுக்குத்தெரிவித்தமுறையிற் காணப்படும் கம்பர் கவித்துவகௌசலம் நுணுகி நோக்கி நுகரத்தக்கது. (கௌசலம்-சாமர்த்தியம்.)

### தோணி கரையை அடைதல்.

347. என்னக் கேட்டவ் இரக்கம் இலாளையும்
தன் நற் கையின் தொழுதனன் தாயென
அன்னப் பேடை சிறைஇல தாய்க்கரை
துன்னிற் றென்னவும் வந்தது தோணியே.

இ-ள். என்று சொல்லக்கேட்டு, அந்த இரக்கமில்லாத கைகேயியையும் (குகன்) தாய் என்று கருதிக் கும்பிட்டான். ஒரு பெட்டையன்னம் சிறகுகளில்லாததாய்க் கரைசேர்ந்ததுபோலத், தோணி (கரைக்கு) வந்தது.

'இரக்கமிலாளையும்-தன்னற்கையிற் றொழுதனின் தாயென' என்றத னல், குகன் கோசலாதேவியைத் தொழுததைக்கூறியதுபோலச், சுமித் திராதேவியைத் தொழுததைச் சொல்லாமலே உணர்த்தியதும்,—"அன் னையும் பிதாவும் முன் அறி தெய்வம்," "தாயிற் சிறந்தொரு கோயி லும் இல்லை" ஆதலால், எத்துணைக் குற்றங்குறைகளையுடையாளெனி னும் தாயைப்போற்றுதல் விலக்கொணுக் கடமை என்பதை விளக்கிய தும் கவனிக்கத்தக்கவை. உருவம் கதி இரண்டினும் தோணி அன் னத்தை ஒத்தல் நோக்கற்பாலது.

இங்கே கைகேயியை இரக்கமிலாள் என்றது,—அத்தேவியின் இரக்கமின்மையைப்பற்றி மந்தரைசூழ்ச்சிப்படலத்தில் அதிசாதுரிய மாகவும் உண்மையாகவும் கூறப்பட்ட, 'இராக்கதர்கள் செய்த தீவினை யும் அவரல்லார்கள் எல்லாரும் செய்த நல்வினையும் தூண்டக் கைகேயி தேவி, (தனக்கு இயல்பாக உள்ள) இரக்கத்தைக் கைவிட்டாள்: அவள் இரங்காமையன்றே, இன்றளவும் இனியும் எல்லா உலகத்தினரும் இராமகதாமிர்தத்தை (செவிவாயால் மனவயிறு நிரம்ப) உண்டுகொண்டி ருப்பதற்குக் காரணம்' என்ற கருத்துள்ள நனிபினிய கவியை ஞாபக மூறுத்துகின்றது. அக்கவி வருமாறு:—

அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க, நல் அருள் துறந்தனள் தூமொழி மடமான்:
இரக்க மின்மையன் றே, இன்றிவ் உலகங்கள் இராமன்
பரக்கும் தொல்புகழ் அமுதினைப் பருகுகின் றதுவே.

[எல்லாரும் தோணியினின்றும் இறங்கி இராமனிருந்த இடத்தை நோக்கிச் சென்றனர். குகனும் கூடச்சென்றான். பலகாதங்கள் கடந்த பின், பரதன் பரத்துவாசமுனிவனது ஆச்சிரமத்தை அணுகினான். அம் முனிவன், மற்றும் உள்ள முனிவர்களுடன், பரதனை எதிர்கொண்டு இனிது வரவேற்றான்.]

குகப்படலம் முற்றிற்று.

[தொடரும்.]

வெ. ப சுப்பிரமணிய முதலியார்.

ஸ்ரீ:

# துளுநாட்டுக் கோசரும் அவரது செல்லூரும்.

## II.

### A. செல்லூர்.

இவ்வியாசத்தின் முதற்பாகமான 'கோசர்' என்பவரைப்பற்றிய வியாசம், கார்த்திகைச்செந்தமிழ்ப்பகுதியில் வெளிவந்துள்ளது. அவ் வியாசத்தில், துளுநாட்டுக்கோசரைப்பற்றிமாத்திரமல்லாமல், 'கோசர்' என்றபதம் தெரிவிக்கிற மற்ற அர்த்தங்களையும் தெரிவித்துள்ளேன். இவ்வியாசத்தில், இரண்டாவதுபாகமான 'செல்லூர்' என்பதை இரண்டு பிரிவாகப் பிரித்து, முதற்பிரிவிற் செல்லூரைப்பற்றி அகநானூற்றி லிருந்து தெரியும்விஷயங்களைக் குறித்துள்ளேன். இரண்டாவது பிரிவில், நற்றிணை-அகநானூறு என்பவற்றின் பாடினோர்வரலாறுகளிற் பின்னத் தூர் நாராயணசாமிஐயரவர்களும், பிறரும் 'செல்லூர் சோழநாட்டுக் கீழ்கடற்கரையின்கணுள்ளது' என் றெழுதியுள்ளவற்றை மறுத்து, அது மேல்கடற்கரையிற் றுளுநாட்டினுள்ளது என்று காட்டி யெழுதி யுள்ளேன்.

> ' மெய்ம்மலி பெரும்பூட் செம்மற் கோசர்
> கொம்மையம் பசுங்காய்க் குடுமி விளைந்த
> பாக லார்கைப் பறைக்கட் பீலித்
> தோகைக் காவிற் றுளுநா டன்ன'. (மாமூலனார். அகம்-15)

என்னும் செய்யுளிலிருந்து, துளுநாட்டில் தனவந்தர்களாகிய கோசர் என்பார் வாழ்ந்தார்கள் என்றும், துளுநாடு, மயில்கள்நிறைந்த சோலை களையுடையதென்றும், அம்மயில்களுக்குப் பிரியமான ஆகாரம் பாகற் பழமென்றும் தெரிகிறது.

'செல்லூர்க் குணாஅது கருங்கட் கோசர் நியமம்' (அகம்-90) என்றும், 'பல்லிளங் கோசர் கண்ணியயரும்—மல்லல் யாணர்ச் செல்லி' (அகம்-216) என்றும், செல்லூருக்குக் கோசர்சம்பந்தம் கூறப்பட்

டிருப்பதால், செல்லூர், கோசர்சம்பந்தங்கூறப்பட்ட துளுநாட்டைச் சேர்ந்ததென்று தெரிகிறது.

மேலும், அகம்-220ல், தென்னிந்திய மேல்கடற்கரைப்பூமியை யுண்டாக்கிய ஸ்ரீபரசுராமன் இவ்வூரில் யாகஞ்செய்து நட்ட யூபஸ் தம்பத்தின் சிறப்பழகு கூறப்பட்டுள்ளது.

அகம் 90ல், இவ்வூரின் கீழ்புறத்துள்ள (விலையுயர்ந்தபொருள்வளங் களால் நிறைந்த) நியமம், மிக்க வீரராகிய துளுநாட்டுக்கோசஜாதியாருக் குரியதாய், அவர்களாற் செவ்வனே பாதுகாக்கப்பட்டுவந்ததென்று தெரிகிறது.

அகம் 216-லிருந்து, குறிஞ்சியொழிந்த மற்ற மூன்று நிலங்க ளாலும் இவ்வூர் தழுவப்பட்டதென்றும் இவ்வூரை 'ஆதன் எழினி' என்பவன் ஆண்டானென்றும், அவன் யானைவேட்டையிற் சிறந்தவ னென்றும் தெரிகிறது.

சங்கப்புலவர்களாகிய கோசிகன்(கோசன்)கண்ணனாரும், பெரும் பூதன் கொற்றனாரும் (இவர் செல்லூர்கிழார்மகனார்) இவ்வூரிற் பிறந்த வர்கள். (அ-66-250).

அநேகம்செல்லூர்க ளிருப்பதால், இவ்வூர், 'துளுநாட்டுச்செல் லூர்' என்றும், 'கோசர்செல்லூர்' என்றும், 'கடவுட்செல்லூர்' என்றும், 'ஸ்ரீபரசுராமன்செல்லூர்' என்றும் வியாவர்த்தித் தழைக்கப்படும்.

இது கோகர்ணத்துக்குத் தெற்கே, மேல்கடலையடுத்திருப்பதாகத் தெரிகிறது.

இதுபற்றிய மற்றவிவரங்களை இதனையடுத்துள்ள வியாசத்திற் காண்க.

ஆ. மா. ச.

## B. செல்லூர் கீழ்கடற்கரையிலுள்ளதா?

அகநானூறு 90-வது செய்யுளின் பாகமாகிய

“ அருந்திறற் கடவுட் செல்லூர்க் குணஅது,
பெருங்கடன் முழக்கிற் றாகி யாணர்
இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கருங்கட் கோசர் நியம மாயினும்
உறுமெனக் கொள்குந ரல்லர்
நறுநுத லரிவை பாசிழை விலையே. ”

என்பதில், செல்லூர் என்னும் ஊர் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இச்செய்யுளில், ‘செல்லூர்க் குணஅது பெருங்கடன் முழக்கிற்றாகி’ என்னும் தொடரை உட்கொண்டு, பின்னத்தூர் நாராயணசாமி ஐயரவர்கள், “செல்லூர் சோழநாட்டுக் கீழைக்கடலருகிலுள்ளது” என்றெழுதினார்கள். (நற்றிணை பாடினோர்வரலாறு-பக். 34). மற்றும் சிலர் “செல்லூர் சோழநாட்டின் கீழ்கடற்கரையின்கண்ணதான ஓர் ஊர். அக-90” என்றெழுதினார்கள் (அகம்: பாடினோர்வரலாறு. பக். 16).

அச்சிட்டிருக்கிற பழையஉரையிற் பின்வருமாறு காணப்படுகிறது:

1. “பெருங்கடன் முழக்கிற் றாகி அலரெழ.” 2. “பெருங்கடல்போலு மாரவாரத்தையுடைத்தாகக் கோசர் வாழும் நியம மென்று மேலேற்றுவாருமுளர்.”

இவற்றால் உரையாசிரியர், செல்லூர் கீழ்கடலோரத்திலாவது கடலோரத்திலாவது இருந்தது எனக் கருதினாரல்லர் என்று தெரிகிறது. இவற்றில் முதற்பொருளில், நாலாவது அடியில் வேறு சரியான பொருத்தத்துடனமைந்துள்ள ‘அலரெழ’ என்பதைப் பத்தாவது அடியிலுள்ள ‘பெருங்கடன்முழக்கிற்றாகி’ என்பது தழுவுகிறது என்பது தூரான்வயி (மாட்டு). இரண்டாவது பொருளில் ‘குணஅது’ என்பதை விளக்கினதில்லை. உரையாசிரியர் பட்சாந்தரமாகக்கூறிய இரண்டாவதுகருத்தை பொட்டிக் குணஅது என்பதையும் விரித்துப் பொருள்காண்பின், “அருந்திறற்கடவுட் செல்லூர்க் குணஅது, பெருங்கடன்முழக்கிற்றாகி யாணர்,.........நியமமாயினும்” என்பதற்குப் பின்வருமாறு பொருள் கொள்ளலாம்.

1. அருந்திறற்கடவுட் செல்லூரிலே—குணாது பெருங்கடன் முழக்கத்தைப்போலும் முழக்கத்தையுடைய—நியமம்.

2. அருந்திறற்கடவுட் செல்லூரினுட் குணாது பக்கமிருக்கிற (தெருவாகிய) பெருங்கடன்முழகத்தைப்போலுமுழக்கத்தையுடைய—நியமம்.

இவற்றில், 'குணாது' என்பதைக் காகாட்சிநியாயமாக முன்சொல்லோடும் பின்சொல்லோடு மிணைத்து இருவிதமாகப் பொருள்கொள்ளப் பட்டிருக்கிறது.

முதற்பொருளில் 'மேல்கடல்முழக்கைப்பார்க்கிலும் கீழ்கடலுக்கு அதிக முழக்கமுண்டு' என்று இளநாகனார் அபிப்பிராயப்பட்டுக் குணாது பெருங்கடல்முழக்கை நியமத்தின் ஆரவாரத்திற்கு உவமித்ததாக ஏற்படும். இதிலும், இரண்டாவது பொருள் சிறந்ததாயும் சுவாபாவிகமாயு மிருக்கிறது. செல்லூரின் கீழ்பாகத்தில் நியமமிருந்தது. அக் கடைத்தெரு, கடல்முழக்கைப்போன்ற ஆரவாரத்தையுடையதாயிருந்தது.* 'கோசராற் காக்கப்படுகிற அல்லது கோசருடைய அக் கடைத் தெருவைசுவரியமுழுவதையும் இவளுக்குப் பரிசமாக அல்லது பாசிழைவிலையாகக் கொடுத்தாலும் இவள் பெற்றோர் அதை மிகவும் சிறிதாக நினைப்பர்' எனத் தோழி தலைமகனுக்குக் கூறினாள் என்பது இச் செய்யுளின்கருத்து.

இவ்விருபொருளிலும் செல்லூர் கடற்கரையையடுத்தது என்று ஏற்படவில்லை; கடல்முழக்கு நியமத்துக்கு அடைமொழியாக வந்தது. செல்லூருக்கு அடைமொழியாக வரவில்லை. மேலும், மேற்படி செய்யுளில், 'செல்லூர்க்குணாது, பெருங்கடன்முழக்கிற்றாகி—நியமம்' என்றிருக்கிறதேயொழிய 'குணாதுபெருங்கடன்முழக்கிற் செல்லூர்' என்பது போன்று இல்லை. பின்வரும் செய்யுள் நான் சொல்லும் பொருளுடன், இதே வாய்பாடுபெற்றுவந்திருத்தல் காண்க.

---

*'விழுநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர், இருங்கழிப் படப்பை மருங்கூர்ப் பட்டினத்து, எல்லுமி ழாவணத் தன்ன, கல்லென் கம்பலை செய்தகன் றோரே' (அகம். 227) என்பதிலும், கடைத்தெரு மிக்க ஐசுவர்யமும் ஆரவாரமுமுடையதெனக் கூறப்பட்டிருத்தல் காண்க.

'விசும்பினல் லேறு சிலைக்குஞ் சேட்சிமை
நறும்பூஞ் சாரற் குறும்பொறைக் குணஅது
... ... ...
கொடுமுடி காக்குங் குரூஉக்க ணெடுமதிற்
சேண்விளங்கு சிறப்பின் ஆமூர் எய்தினும்,
ஆண்டமைந் துறைநு ரல்லர்,நின்
பூண்டாங் காகம் பொருந்துதன் மறந்தே' (அகம்—159.)

இங்கே குணஅது என்பது 'குறும் பொறை' என்பதற்குமுன்னே சேர்க்கப் படாமல், பின்னால்வரும் 'ஆமூர்' என்பதோடுசேர்க்கப்பட்டு, 'குறும் பொறைமலைக்குக்கீழ்பாலுள்ள ஆமூரையடைந்தாலும் என்று பொருள் பொருந்திவருதல் காண்க.

அப்படியிருக்க, மேற்சொன்னபதிப்பாசிரியர்கள் செல்லூர்கீழ்கடற் கரையிற் சோழமண்டலத்திருந்தது என்றுகொண்டது விபரீதமாகும்.

இனி, செல்லூர் எவ்விடத்திலிருந்திருக்கவேண்டுமென்பதை ஆராய்வோம்.

முன் நாம் எடுத்துக்காட்டிய அகம்-90-ம் செய்யுளில் செல்லூருக் குக் கோசர் சம்பந்தம் கூறியிருக்கிறது. அகம் 216-ம் செய்யுளிலும் 'பல்விளங் கோசர் கண்ணியயரு, மல்லல் யாணர்ச் செல்லி' எனச் செல் லூருக்குக் கோசர்சம்பந்தம் கூறியிருக்கிறது. கோசர் வாழ்ந்த பிரதேசம் தெரிந்தால், செல்லூர் இருந்திருக்கக்கூடிய பிரதேசத்தை ஊகிக்கலாம். "மெய்ம்மலி பெரும்பூட் செம்மற் கோசர் துளுநாடன்ன" என்று அகம் 15-ல் வந்திருப்பதால், கோசருடைய நாடு துளுநாடு என்று தெரிகிறது. ஆதலால், கோசர் செல்லூரும் துளுநாட்டைச் சார்ந்தே இருக்கவேண் டும். துளுநாடு மேல்கடலைச்சார்ந்த நாடு.

மேல்கடலைச்சார்ந்தநாட்டைத் தென்னிந்தியாவிலேற்படுத்தியவர் பரசுராமர். பரசுராமர்சம்பந்தம் இவ்வூர்விஷயமாயே கிடைத்துவிட்டால் இவ்வூர் மேல்கடலையடுத்துத்தானிருந்திருக்கவேண்டும் என்று இன்னும் நிச்சயமாய்த் தெரிந்துகொள்ளலாம்.

"கெடாத் தீயி னுருகெழு செல்லூர்க்
கடாஅ யானைக் குழூஉச்சமந் ததைய

மன்மருங் கறுத்த மழுவா ணெடியோன்
முன்முயன் றரிதினின் முடித்த வேள்விக்
கயிறரை யாத்த காண்டகு வனப்பி
னருங்கடி நெடுந்தூண் போல யாவருங்
காண லாகா மாணெழி லாகம்
உள்ளுதொறும் பனிக்கு நெஞ்சினை நீயே." (அகம்-220.)

என்பதிலிருந்து, செல்லூர், பிராமணர்கள் என்றும் முப்போதும் அழலோம்பும்படியானது என்றும், அச்சத்தைத் தரும்படியானது என்றும், இருபத்தொருதலைமுறை அரசுகருவறுத்த ஸ்ரீ பரசுராமன், யாகம்செய்யப்பெற்ற பெரும்பெருமைவாய்ந்தது என்றும் அறிகிறோம். மேலும், எம்பிரான் ஸ்ரீ பரசுராமன், (தான் யாகம் செய்த இடத்தில் தன் கையால்) நட்ட யூபஸ்தம்பமொன்று, தன்மத்தியில் கயிறுயாக்கப் பெற்றதாயும், காண்டகு வனப்பினதாயும், அருங்கடி (காவல்) உடையதாயும், யாவருங் காணலாகா மாட்சியுடையதாயும், 'உள்ளுதொறும் நெஞ்சுபனிக்கு' மியல்பினதாயும் காணப்பட்டதென்று மதுரை மருதனிளநாகனார் கூறுகிறார். 'அருந்திறற்கடவுட் செல்லூர்க்குணாது' என்ற பாடலைப் பாடியவரும் இவரே. (அருந்திறற்கடவுள்-ஸ்ரீ பரசுராமன்). இம் மதுரையார் முதலானோர்க்கு அவ்வூர் அக்காலத்தில் ஓர் பரிசுத்த புண்ணிய தீர்த்த யாத்திரை ஸ்தலமாயிருந்தது. புத்தஸ்தூபங்களிற் சேமித்துவைக்கப்பட்டிருக்கும் புத்தஅஸ்திதாதுக்கள் இப்போதைய பௌத்தருக்கு எவ்வளவு மதிப்பையும் வியப்பையும் கொடுக்கின்றனவோ, அவ்வளவினும் அதிகமான மதிப்பையும் வியப்பையும், செல்லூர்த்தூண், அக்காலத்தில், 'நக்கீரனார்'போன்ற வைதிகர்களுக்குக் கொடுத்திருக்குமன்றோ!. மன்மருங்கறுத்த பராக்ரமதெய்வமாகிய ஸ்ரீ பரசுராம சம்பந்தத்தையுட்கொண்டன்றோ இளநாகனார் கெடாத் தீயிற்செல்லூர், உருகெழுசெல்லூர், அருந்திறற்கடவுட்செல்லூர் என்றார். சங்கப்புலவரால் கொண்டாடப்பட்ட பரசுராமனுடைய வேள்வித் தம்பச்செல்லூரையோ, அங்கு இங்கு என்பது.

இச் செல்லூர் எந்நிலத்தைச் சேர்ந்ததென்று அகநானூற்றிலிருந்து அறிய முடியுமா என்பதையும் பார்ப்போம்.

"கடலாடு மகளிர் கொய்த ஞாழலும்
கழனி யுழவர் குற்ற குவளையும்
கடிமிளைப் புறவிற் பூத்த முல்லையொடு
பல்லிளங் கோசர் கண்ணி யயரும்
மல்லல் யாணர்ச் செல்லிக் கோமான்
எறிவிடத் துலையாச் செறிசுரை வெள்வேல்
ஆதன் எழினி யருநிறத் தழுத்திய
பெருங்களிற் றெவ்வம் போல
வருந்துவர் மாதவர் சேரியாஞ் செலினே" (அகம். 216-ஐ.மூ.)

இதில், செல்லூர்ப் பல்லிளங்கோசர், நெய்தனிலத்து ஞாழற்பூக்களைக்கொண்டும் மருதநிலத்துக் குவளைப்பூக்களைக்கொண்டும் முல்லைநிலத்து முல்லைப்பூக்களைக்கொண்டும் கண்ணிதொடுத்தணிந்து விளையாடுவார்களென்றதால், இவ்வூர் குறிஞ்சியொழிந்த மற்றநிலங்களால் மயங்கியதாகுமென் றேற்படுகிறது. துளுநாட்டாராகிய கோசர்சம்பந்தமும், மலைமண்டலஸ்தாபகாசார்யரான ஸ்ரீ பரசுராமசம்பந்தமும் இவ்வூர்க்குச் சொல்லப்படுவதால், இதிற் குறித்த 'மகளிராடுகடல்' மேல்கடலேயாம்.

இனி, 'பெருங்கடல்முழக்கிற்றாகி' (அகம்-90) என்பதற்கு, அடுத்துள்ள பெருங்கடல்முழக்கு எப்போதும் கேட்கும்படியான நியமமென்று கொள்ளினும் கொள்க.

இன்னும் 'குறுதுபெருங்கடன்முழக்கிற்றாகி' யென்பதற்கு, மேல்கடலுக்கும் *மாக்கழிக்கும் மத்தியிலுள்ள தென்வடல் ஒடுங்கி நீண்ட நிலப்பிரதேசத்தின் கீழோரத்தில்-செல்லூர் இருந்ததெனக்கொண்டு, குறுது மாக்கழியாகிய பெருங்கடல்முழக்கிற்று அவ்வூர், எனக் கொள்வோமேயெனின், மாக்கழியின் சம்பந்தமேற்படாத வடநிலப்பகுதியாகிய துளுநாட்டுப்பக்கத்தில் இவ்வூரைத் தேடவேண்டுமென்று இதுவரை நாம் பார்த்த செய்யுள்களிலிருந்து ஏற்படுகிறது என்போம். [இப்போதுள்ள இடங்களிலேயே இப்போதுள்ள விஸ்தீர்ணப்படி கழிகள் அக்காலத்திலும் இருந்திரா என்றாலும்,

*மாக்கழி-Back-Water.

"(குலைபிறைஞ்சிய கோட்டாழை
யகல்வயன் மலைவேலி)
நிலவுமணல் வியன்கானற்
றெண்கழிமிசைச் சுடர்ப்பூவிற்
றண்டொண்டி" (புறம் 17.)

"மாக்கழி மலர்ந்த நெய்த லானும்
கண்ணா றும்மே கானலந் தொண்டி" (புறம் 48.)

என்னு மிவைபோன்ற செய்யுள்களிலிருந்து அக்காலத்திலும் கழிகள் மேல்கரையில் துளுநாட்டுக்குத்தெற்கேதான் மிக்கிருந்தன என்று வற்படும்.]

'கேரளோற்பத்தி' என்னும் மலையாளசரித்திரநூலில் இவ்வூர் 'பெருஞ்சேல்லூர்' என்று வழங்கப்பட்டு ஸ்ரீ பாசுராமன் சம்பந்த முடையதாகக் கூறப்பட்டிருக்கிறதென்றும், ஸ்ரீ பாசுராமன்சம்பந்தத் தால், 'ராமன்தளி' யென்றழைக்கப்படும் ஏழில்மலை-கோகர்ணம், இவ் வூர்களுக்கருகிற் செல்லூர் காணப்படவேண்டுமென்றும் சென்னைச்சருவ கலாசாலைச் சரித்திரப்போசிரியர் ஸ்ரீமான். டாக்டர் S. கிருஷ்ணசுவாமி ஐயங்காரவர்கள் M.A., (Part IV J. R A. S. 1923) எழுதியிருப்பது இவ்வியாசத்திற்கு உற்றதுணையாய்நின்றது.

வித்வான்: ஆ. மா. சடகோபராமாநுஜாசார்யன்,
கவர்ன்மெண்டுகாலேஜ், கும்பகோணம்.

உ

## கோசரைப்பற்றிய சில அதிகக்குறிப்புகள்.

1. நனைக்கள்ளின் மனைக்கோசர்
தீந்தேறனறவுமகிழ்ந்து (4—396)

என்பதிலிருந்து இவர்கள் கள்ளுண்பார்களென்று அறியலாம் (முதற்பிரிவு—முதற்பொருள்).

2. ‘கோசர்’ வியாசம் 39-வது பக்கத்தில் பின்னைப் பறைபடப் பணிலமார்ப்ப என்ற தென்னை யெனின் இவ்வவையார் நியாயம் விசாரிக்கவந்து உட்காரும்போது பறைபடப்பணிலமார்ப்பத்தோன்றி இறை கொள்வார்கள் (தங்குவார்கள்) என்றெழுதியுள்ளேன். அதற்குப் பின்வருவது ஓர் ஆதாரமாகும்.

ஓய்மாநாட்டுக்கிளியனூரில் (கிளியநல்லூர்திண்டிவனம்தாலூகா தென்ஆற்காடுஜில்லா) விஜயநந்திவிக்கிரமபல்லவன்காலத்தில் தி (தீ?) கைத்திறலாரற்கட்டப்பட்ட விஷ்ணுக்ருகமாகிய வைகுந்தவாசப் பெருமாள் கர்ப்பக்ருகம் தென்சுவரில் முதல்ராஜராஜசோழனின் 16வது ௵-த்தில் (1001 A.D.) ‘பெரும்பலமருதூரான்’ செய்தசாசனத்தில் சபைகூடும்போது பறைடிப்பதற்கு ஒருகலம் நெல் ஏற்படுத்தியதாகத் தெரிகிறது. (No. 156 App C 1—E. A. Rep: Madras: 1919.)

3. ‘கோசர்’ வியாசம் 41வது பக்கம் கடைசிவரியில் ‘அத்தேசத்து ராஜாங்கஉத்தியோகஸ்தர் என்றாவது கொள்க’ என்றெழுதியிருக்கிறேன்—அதற்கு, பின் வருவது ஓர் ஆதாரமாகும்:

கீழைச்சாளுகிய முதல் ஜயசிம்மவல்லபனின் ‘புலிபூம்ரா’ப்பட்டயத்தின் ஆஞ்ஞப்தி, ஹஸ்திகோச:, வீரகோச:—என்றுசொல்லப்பட்டிருக்கிறது. இவற்றிற்கு ‘யானைச்சேனை அதிகாரி, காலாட்சேனை அதிகாரி’ என்று பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது. (P. 85, Madras, Ep, Rep: 13—14) இப்பட்டயம் ஹிஸ்டரிப்ரொபஸர் ஸ்ரீமாந் V. ரங்காசார்யர், M A. L.T., அவர்களாற் பதிக்கப்படுகிறது.

(*N. B.*—‘கோசர் வியாசம்’ 45-வது பக்கத்தில் கடைசிவரிக்கு முந்திய வரியில் ‘என்கிறார்’ என்றவார்த்தை மிகை.)

ஆ. மா. ச.

# மதிப்புரை.

கம்பராமாயணம் முதலாவது பாலகாண்டம்:—இது ஸ்ரீமத். வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியரால் எழுதிய பதவுரை, விசேடவுரை குறிப்புரை முதலியவிளக்கங்களோடு நன்கு பதிக்கப்பட்டு வெளிவந்திருக்கிறது. கம்பராமாயணப்பகுதிகளுக்கு இதுகாறும் பலவுரைகள் வெளிவந்திருப்பினும் இதுபோல வேண்டுமளவு விரிவும் விளக்கமும் தெளிவும்பொருந்திய வுரை ஒன்றேனும் காணப்படவில்லை. தமிழிற் சிறந்தபயிற்சியில்லாதவர்களும் ஆசிரியருதவியில்லாமல் கம்பராமாயணச் செய்யுட்பொருள்களைத் தாமே எளிதிலுணர்ந்துகொள்வதற்கு இது சாதனமாயுள்ளது. பாட்டுக்களின் விஷயங்கள் முதலிற் குறிக்கப்பட்டுள்ளன. உரையில் விளக்கவேண்டிய விருத்தாந்தங்களெல்லாம் விரித்துரைக்கப்பட்டுள்ளன. அன்றியும் ஆங்காங்கு அறியவேண்டிய காரணங்களை அறிவித்தும், அணிமுதலியவற்றை விவரித்தும், அரிய பிரயோகங்கட்கு மேற்கோள்காட்டியும், வேண்டியவிடங்களில் உரைவேறுபாடுகளுரைத்தும், இலக்கணமுடிபுகளெழுதியும் மற்றும் வேண்டுவன பலவும் புலனாகவிளக்கியும் இயன்றவளவில் நன்றாயெழுதியிருப்பது பாராட்டத்தக்கது. நான்முகம், நூலாசிரியர்வரலாறு அரும்பதமுதலியவற்றின் அகராதி இவைகளும் எழுதிச்சேர்க்கப்பட்டுள்ளன. மற்றைக்காண்டங்களும் இவ்வாறு உரையெழுதிப் பதிக்கப்பட்டு வெளிவருமாயின், ராமாயணம் படிக்கவிரும்பும் தமிழ்மக்கட்கெல்லாம் மிகவும் பயன்படத்தக்கனவாம். ௬௭0 பக்கங்களடங்கிய இப்புத்தகத்தின் விலை ரூபா ஐந்து. வேண்டுவோர் ஸ்ரீமத் கோபாலகிருஷ்ணமாசாரியர் 17, தெளிசிங்கப்பெருமாள்கோவில்தெரு, திருவல்லிக்கேணி, என்ற விலாசத்தில் பெறலாம்.

பிரபவஹு வாக்கியபஞ்சாங்கம்:-இஃது யாழ்ப்பாணம் கொக்குவில் இரகுநாதையரவர்கள் தத்தபுத்திரர் ஸ்ரீமத், சிவராமலிங்கையரவர்களாலும், பௌத்திரர் ஸ்ரீமத், பஞ்சாக்ஷர ஐயரவர்களாலும் கணிக்கப்பெற்று நல்லகாகிதத்தில் 92 பக்கங்களுள்ள புத்தகமாகப்பதிக்கப்பட்டு வெளிவந்திருக்கிறது. இதில், சாதாரணமாக வெளிவரும் பஞ்சாங்கங்

களிலுள்ள விஷயங்களோடு கணனம், ஓரை, சங்கிதை என்னும் சோதிடநூற்பகுதிகளால் அவசியம் அறிந்துகொள்ளவேண்டிய முக்கியமானவை பலவும் சேர்க்கப்பட்டுள்ளன. ஆதலால் இது தினசுத்தியும், விருதாதிகளும் பார்த்தற் குபயோகமாதுமளவிலன்றி ஜாதகம் முகூர்த்தம் முதலியவற்றை நிர்ணயிப்பதற்கும் மிகவுமுபயோகமுள்ளது. இதன் விலை சதம் 25. தபாற்செலவு சதம் 5. வேண்டுவோர் ஸ்ரீமத். இ. சி. இரகுநாதையரவர்கள், சோதிடபரிபாலனமடம் கொக்குவில் போஸ்ற்று, யாழ்ப்பாணம் (இலங்கை) என்றவிலாசத்துக்கு ஐந்தணா தபால் ஸ்டாம்பு அனுப்பி புக்போஸ்டில் வரப்பெறலாம்.

தமிழ்ப்பாடபுத்தகங்கள் (ஐந்தாவது, ஆறுவது, ஏழாவது):— இம்மூன்றும் கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். ஊ சா. வேங்கடராமையரவர்களால் எழுதப்பட்டன. இவற்றுள் ஒவ்வொரு புத்தகமும் உரைநடைப்பகுதி, செய்யுட்பகுதி, இலக்கணப்பகுதி என மூன்றுபகுதியாக்கி உரைநடைப்பகுதியுட் சிறுவர்கள் தெரிந்துகொள்ளவேண்டியனவும், அவர் அறிவுவளர்ச்சிக்குரியனவுமாகிய பலவிஷயங்கள் தெளிவாவெழுதப்பட்டுள்ளன. இலக்கணப்பகுதி செய்யுட்பகுதிகளும் சிறுவர்கள் எளிதிற்படித்துணருமாறு தெரிந்தெடுத்துத் தொகுக்கப்பட்டுள்ளன. இப்புத்தகங்களின் விலை முறையே, 6, 7, 9 அணுக்களாகும். வேண்டுவோர் தி. கி. சுப்பிரமணியம் அன் ஸன்ஸ், கும்பகோணம் என்ற விலாசத்திற் பெறலாம்.

செங்குந்தர் பிரபந்தத்திரட்டு:—இது சென்னை மெய்கண்டான் கல்லூரித்தலைமையாசிரியர் வண்ணக்களஞ்சியம் ஸ்ரீமத். காஞ்சி நாகலிங்க முனிவரவர்களாற் பதிக்கப்பட்டது. இதில், செங்குந்தர் சிறப்புத் தோன்ற பலபுலவர்கள்பாடிய பிரபந்தங்களுடன் ஈட்டியெழுபதுக்குப் புல மேற்கோள்காட்டித்தீட்டிய விரிவுரையும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்தைப்பற்றி தென்மொழி, வடமொழி, ஆங்கிலமொழிவல்லுநரான பிரபலபண்டிதர்களால் எழுதப்பட்ட மதிப்புரைகளும் பலவுள. இதனை இவ்வாறு தொகுத்துச்சேர்த்துப் பதிப்பித்த முனிவரவர்களது குலாபிமானமும் தமிழபிமானமும் பாராட்டத்தக்கன. இப்புத்தகத்தின் விலை ரூபா 3. வேண்டுவோர் (1) தி. க. சபாபதிமுதலியாரவர்கள் முனிசிபல் கௌன்சிலர், திருவாரூர், தஞ்சாவூர் ஜில்லா. (2) மதராஸ்

பளகாட் கம்பெனி, நெ. 31, அரண்மனைக்காரத்தெரு, மதாரஸ். (3) தி. க. கலியாணசுந்தர முதலியாரவர்கள் நெ. 11 கைசர்தெரு, கொழும்பு என்ற இம் மூன்று இடங்களிலும் பெறலாம்.

கயாமான்மியம்:—இது தேவாரம்நகாம் வித்வான் செல்லமையங்கார் என்ற ஸ்ரீமத். சேஷாத்திரி ஐயங்காரவர்களால், வடமொழியினின்றும் தமிழில் மொழிபெயர்ப்பாகப் பாடப்பட்டிருக்கிறது. இதில் ஏழு அத்தியாயங்களும் இருநூற்றறுபத்தைந்து பாட்டுக்களால் முடிந்துள்ளன. பாட்டுக்கள் படிப்பவர்யார்க்கும் பொருள் விளங்கும்படி செம்பாகமாகப் பாடப்பட்டுள்ளன. இதனால் புண்ணியக்ஷேத்திரங்களிற்சிறந்த கயை யின் பிரபாவங்களெல்லாம் நன்குணரத்தக்கன. இக்காலத்துப் புதிய தல புராணங்கள் பாடுவதைவிடப் பழமையான க்ஷேத்திரங்களின் பிரபாவங்களைத் தெளிவான தமிழ்ச்செய்யுளிற் செய்திருப்பது பாராட்டத்தக்கது.

பர்த்துருகரி:—இது வடமொழியிலுள்ள பர்த்ருஹரி ஸுபாஷிதம் என்னும் பிரபந்தத்தை, எட்டயபுரம் வித்வத் பரம்பரையினரான கடிகை நமச்சிவாயப்புலவரவர்கள் தமிழ்ச்செய்யுளாக மொழி பெயர்த்தளிக்கப்பட்டது. இதில் நீதிசதகம், சிருங்காரசதகம், வைராக்கியசதகம் என்னும் மூன்றுசதகங்களிலும் முந்நூறு பாடல்களுள்ளன. இதன்விலை அணா நான்கு. தபாற்கூலிவேறு. வேண்டுவோர் அ. முத்துசாமிபிள்ளையவர்கள், மானேஜிங் புரோப்ரைட்டர், மீனலோசனி அச்சியந்திரசாலை, தெற்குக்கோபுரவாசல்தெரு, மதுரை என்றவிலாசத்திற் பெறலாம்.

கணபதி:—இது ஸ்ரீமத் பூ. மு. முருகேசமுதலியாரவர்களால் விநாயகக்கடவுளைப்பற்றி முக்கியமாயறியவேண்டிய பல விடயங்களைத் தொகுத்துச் சிறுவர்கள் எளிதிலுணரும்படி செவ்விய தமிழ்நடையிலெழுதப்பட்டுப் பருத்த எழுத்தில் முக்கியமான சில படங்களுடன் அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் விலை நாலணா. வேண்டுவோர் சென்னையில் ஸி குமாரசாமிநாயுடு அன் ஸன்ஸ் என்றவிலாசத்திற்பெறலாம்.

குமரன்:—இதுவும் மேற்கண்டபடி பூ. மு. முருகேசமுதலியாரவர்களால் முருகக்கடவுளைப்பற்றியெழுதப்பட்டது. இதன் விலை அணா 3. வேண்டுவோர் மேலேகண்டவிலாசத்திற்பெறலாம்.